மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : வியாபாரிகளும் இதோடு தொடர்பு கொண்டிருந்தார்களா, இல்லையா என்பது தெரியவில்லை. மதுக்கரை அருகே கேரள போலீஸைச் சேர்ந்த சங்கரன்குட்டி நாயர்—உதவி சப் இன்ஸ்பெக்டர், நாராயணன் நாயர்—ஹவில்தார், சந்திரசேகர வாரியார்—தலைமைக் காவலர், பேபி பால் ராஜ்—காவலர் ஆகியோர் ஷண்முகா ரைஸ் மில்லிலிருந்து 8 மூட்டை அரிசி, 2 சிறிய மூட்டை அரிசி இவைகளை வாங்கி ஏற்றிக்கொண்டு போகிறார்கள் என்ற தகவல் கிடைத்தது, உடனே நம்முடைய போலீஸ் அதிகாரிகள் சென்று அவர்களைப் பிடித்திருக்கிறார்கள். அங்கிருந்த போலீஸ் டெப்யூடி சூப்பரின்டெண்டெண்டு அவர்களை ஜாமீனில் விடுத்திருக்கிறார். சொந்த உபயோகத்திற்கு வாங்கினார்களா, அல்லது இம்மாதிரி எப்பொழுதும் செய்கிறார்களா என்ற நிலைமை பரிசீலனையில் இல்லை.

போக்குவரத்து நிறுவனங்களுக்கு நிதி உதவி

***178 வினா—திரு. என். டெ்வினிஸ் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாநிலத்திலுள்ள போக்குவரத்து நிறுவனங்கள், மத்திய அரசால் நிறுவப்பட்டுள்ள போக்குவரத்து நிதிக் கழகத்தை, நிதி உதவி வேண்டி, 1972-73-ம் ஆண்டுகளில் அணுகியுள்ளனவா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

சென்னை-போந்தவாக்கம் பேருந்து வழித்தடம்

***179 வினா—திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு போக்குவரத்துக் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையிலிருந்து போந்தவாக்கம் செல்லும் வழித்தடம் எண் 111-பி பேருந்தினை சூரப்பூண்டி, சாணாப்புத்தூர் கிராமங்களின் வழியே திருப்பிவிடும் செயற்குறிப்பு ஆய்வில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், இது எப்போது நிறைவேற்றப்படும் ?

1974 சனவரி 25]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) இல்லை.

(இ) வினாவுக்கு இடமில்லை.

திரு. கா. வேழவேந்தன்: ஏற்கெனவே பரிசீலனையில் இருந்த திட்டம்தான் இது. அந்தப் பாதை அகலப்படுத்தப்பட்டுவிட்ட காரணத்தினால் அதை மீண்டும் பரிசீலனை செய்து அந்த வழித் தடத்தில் பேருந்தினை விட முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பாதை சரியில்லை என்கிற தகவலைத் தான் தந்திருக்கிறார்கள். பாதை சரியாக இருக்குமானால் மறுபரிசீலனை செய்யப்படும்.

பிராட்வே-முக்காரம்பாக்கம் பேருந்து வழித்தடம்

*** 180 வினா—திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) வழித்தடம் எண் 137 (பிராட்வே-முக்காரம்பாக்கம்) பேருந்து 1—10—1973 முதல் நிறுத்தப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், அவ்வழித்தடத்தில் மீண்டும் பேருந்துப் பணியினைத் தொடர எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

திரு. கா. வேழவேந்தன்: அந்தப் பேருந்து சில நாட்களாக நின்றுவிட்டது என்று சொல்கிறார்கள். காரணம் அது பழைய பேருந்து. புதிய பேருந்தினைவிட ஆலோசிப்பார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேருந்து இப்போது சரியாகப்போய் வருகிறதென்றுதான் சொல்கிறார்கள். பழைய பேருந்தா, புதிய பேருந்தா என்கிற விவரம் என்னிடத்தில் இல்லை.

குழந்தைகள் அருங்காட்சியகம்

*** 151 வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிறுவர்களின் கலைத்திறமையை வளர்த்திட தனி மியூசியம் நிறுவிட அரசு ஆலோசித்து வருகின்றதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?